உ

கடவுள் துணை.

விச்சித்திர

# ஜெகஜாலக்கண்ணாடி.

ஏழாம்பாகம்.

—(*)—



இவை-செஞ்சி
ஏகாம்பரமுதலியாராலியற்றப்பட்டு.

ஆதிபுரி.
இரத்தினவேலு முதலியாரது
வாணீவிலாஸ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1895.

கடவுள் துணை.

# விச்சித்திரஜெகஜாலக்கண்ணாடி.

(*)-[*] (*)

## காப்புவிருத்தகம்.

பொய்யுரையாபோகருட பாதம்போற்றி
　　பூலோகமதிக்கும் சட்டைமுனிதாளபோற்றி
மெய்யருளாய்விளங்குகுயபமுனியேபோற்றி
　　மேன்மையுள்ளபிரம்மரிஷிபுனைத்தாள்போற்றி
கைமுறையாய்க்கண்டசித்தர் செயலேபோற்றி
　　காரணமாய்முன்னுதவுங்கணனேபோற்றி
வையகத்தோரேத்துகொங்கணர்தாள்போற்றி
　　வாமுதவும்ஜாலக்காள்போற்றிபோற்றி
　　　　கசகசாவில் மீன்வுண்டாகும்ஜாலம்

உனைமதிக்கபின்னமொருவித்தைகேளு
　　உத்தமனேமீனுடையசெனையைவாங்கி
பனியில்வைத்துநிழலுலர்த்திபதினைந்தாளுள்
　　பக்குவமாய்க்கசகசாவில்கலந்துகொள்ளு
துணையிருக்ககாளியென்று நீரில்போட
　　துள்ளுமப்பாமீன்களெல்லாம்வசவசென்றே
அனைவர்களும்ஆச்சரியம்கொண்டுவுன்னை
　　அடிதொழுதமந்திரத்தி லரிபென்பாரே.

(வ-ம்) மீனுடைய செனையைவாங்கி இரவில்பனியில்வைத்துபகலிலநிழலில்உலாத்தி பதினைந்தாளுள்சென்றபிறகு சககசாவில்கலர்த்து சலத்திற்போடமீன்வுயிருடன்வுண்டாகும் சினைபச்சை வாங்கவேண்டியது.



## தேங்காய்நடக்குஞ் ஜாலம்.

மந்திரமேயில்லையென்று சொல்லவில்லை
　　மந்திரங்கால்மதிமுக்கால யிருக்குதப்பா
தந்திரமாய்தேஙகாயை கொண்டுவந்து
　　தலைகுடுமைபோக்காமல் வுடைத்துநீதான்
அந்திரமாய்அடிமுடியை திருகிவிட்டு
　　அப்பனேவீட்டெலியை உள்ளேவிட்டு

சொந்தமாய்வச்சிரத்தால் ஒட்டிவிட்டு
 சூழ்ந்திருக்கும் சபையில்வைத்தால் நடக்குமபாரே.

(வ-ம்) தேங்காயைகொண்டுவந்து பக்குவமாய் யிரண்டாய்வுடைத்து அடிமுடியைத் திரிகிவிட்டு வீட்டெலியை உள்ளேவிட்டு வுடைத்தப்பிரகாரம் உடைத்தவாயிலே வச்சிரந்தடவிஒட்டிவிட்டு காய்ந்தபிறகுகுங்குமம்மஞ்சளிட்டு தூபங்கொடுத்து சல்மலையாளபகவதி காளிஓடிவா தேங்காயென்று அதனருகில் கையைத்தட்டினால் கடகடவென்பதாகஓடும் கண்டவர்கள்வசியமென்று நம்புவார்கள். அ

ஆட்டுத்தலைகற்றுஞ்ஜாலம்.

அறுத்ததொருஆட்டுதலை கற்றுமாகில்
 அனைவருக்கும் ஆச்சரியந்தானையப்பா
சறுத்துடனே ஆட்டுதலைகொண்டுவந்து
 சட்டமுடன்மேல்மண்டை தனைகிளப்பி
பொருந்திருக்கும மூளையெல்லாம்யெடுத்துவிட்டு
 புண்ணியனேதவளையதின் வுள்ளேவைத்து
அறுத்திடுநீவுடைத்தபடி வச்சிரத்தால்
 அப்பனேஒட்டிவிட கற்றும்பாரே

(வ-ம்) கொம்பில்லாதஆட்டுத்தலைகொண்டுவந்துபக்குவமாய்மேல்மண்டை ஓட்டைக்கிளப்பி மூளையெல்லாமெடுத்துவிட்டு வெற்றிலைதோட்டத்திலிருக்குந் தவளையைக்கொண்டுவந்து தலையுள்ளேவைத்து மண்டைஓட்டுக்குவச்சிரந்தடவிஒட்டிவிட்டு காய்ந்தபிறகுசமூலி மஞ்சள்குங்கும மிட்டுவாயில் ஒருஎலுமிச்சம்பழம்வைத்து சாம்பிராணி தூபம்போட்டு அந்ததலைநாசியில் புகையேறும்படியாகக் காட்டினால்ஆட்டைப்போலவே கற்றுமாசித்துவாரத்திற்குசரியாய் தவளைமுகம்வைக்கவும்.

ஒருவர்கையில விஷம்யேறுஞ் ஜாலம்.

என்னமோமந்திரமென்று இசைத்துநிற்க
 யெடுத்துகொள்ளுபூனைகாஞ்சி யிலையுங்காயும்
நண்ணுகபூனையுட புடுக்கங்காயுமசேர்த்து
 நலமானபெண்டைக்காய் சினையும்சேர்த்து
பண்ணவேயின்னுன்கு சொணையுமப்பா
 பக்குவமாய்டப்பிதனில வைத்துக்கொண்டு
யென்னடியெட்சணி யென்றுசொல்லி
 யெடுத்துகொஞ்சம்தடவிவிடு பேரும்பாரே
(வ-ம்) பூனைகாஞ்சியிலையின்யேலிருக்கும் சொணையும்காயின்மேலிருக்கும் சொணையும் பூனைபுடுக்குகாய் மேல்சொணையும்

பெண்டக்காய்சொணையும் நாலுதினுசும்சேர்த்து ஒருடப்பியில் வைத்துக்கொண்டு விரலில்தொட்டு மண்ணையெடுப்பவர்மேல்கு னிந்து மண்ணை எடுத்துப் பூசினால் விஷம்போல்யேறும். ௬

வேறுநெருப்பில்லாமல் சோறுகொதிக்குஞ்ஜாலம்.

அக்கினிமூட்டிடாமல் அன்னமுஞ்சமைக்குஞ்சாலம்
பக்குவமாகச்சொலவேண பாரினிலயெவருங்காணார்
சிகமெனசதுரக்கள்ளி சிறப்புடன்பால்கறந்து
வைக்கவேஅரிசிதனனில வார்த்திடவேகும்பாரே

(வ-ம்) ஒருசிரியகுடுவையில் கொஞ்சம்அசிரிபோட்டு பூமி யின்மேல்வைத்து ஜலமவிடுவதுபோல சதுரக்கள்ளிபாலைத் தந் திரமாகவிடடு சற்றுநேரம் பொருத்துப்பார்த்தால் சோர்வெந்தி ருக்கும் பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ௭

கோழிமுட்டை ஜலத்தில்மேயும்ஜாலம்.

வசியமென்பார்பேவலென்பார் திகைத்துநிற்பார்
வாயிலவந்தபடியுரைப்பார் வழியைக்காணார்
உச்சிதமாய்கோழிமுட்டை கொண்டுவந்து
உத்தமனேதுவாரமிட்டு அம்பிலியைப்போக்கி
ஆச்சரிக்கஅட்டைதனை உள்ளேவிட்டு
அப்பனேதுவாரமதை மெழுக்கால்மூடி
நிச்சயமாய்ஜலமீதில் விட்டுப்பாரு
நீச்சலிடமேயுமப்பா ஆச்சரிப்பார்

(வ-ம்) கோழிமுட்டைகொண்டுவந்து உள்ளேயிருக்கும் அ ம்பிலியைப் போக்கிவிடடு அட்டையை வுள்ளேவிட்டு துவாரத் தைமூடிவிட்டு தண்ணியின்மேல்விடமேயும் அம்பிலியைபோக் கும்வி ம் சிரியதுவாரஞ்செய்து தண்ணியிலபோட்டு வைததா ல முட்டைக்குள்யிருப்பதெலலாம் வந்துவிடும். ௮

முட்டையின்மேலே விசித்திரமெழுதும்ஜாலம்.

முட்டைமேலேவிசித்திரம் யெழுதுஞ்சாலம்
முறைமைதனைச்சொலலுகிறேன் முறையைக்கேளு
சட்டமாய்அமபிலியைப் போக்கிவிட்டு
சரியானமதனமொழுக்கை மேலேபூசி
இஷ்டமாய்யெழுததெலலாம் போக்கிவிட்டு
எடுத்துவிடு பளாஸ்திரமெல்லாமப்பா

நாட்பிவாய்னுயின்விட்டே யூரவைத்து
நாலுமணிநேரம் தங்கிகாட்டலாமே

(வ-ம்) கோழிமுட்டையைகொண்டுவந்து உள்ளிருக்கும் அம்பிலியைப்போக்கி தேன்மொழுக்கைக்காச்சிமேல்முழுதும்பூசிவிட்டு சித்திரங்கள்யெழுதலாம் யெழுதிவிட்டு எழுகதுக்குள்ளிருக்கும் மெழுக்கையெலலாம் எடுத்துவிட்டு ஒயினில் கூ உமணிநேரமாகிலும சமணிநேரமாகிலும் வூரவைத்துஎடுத்துஜலத்தில் கழுவிகாட்டினால் ஆச்சரியப்படுவாாகள் அலபினாத்தியாவது அல்லதுவூசியாலாவது எழுதவேண்டியது. அகூ

## முட்டைகுதிக்கும்ஜாலம்.

கேட்டவாகள்ஆச்சரிக்க முட்டைதன்னை
கீழ்வைத்தால்குதிக்கவொரு சூக்ஷம்பாரு
வாட்டமாய்பரந்துடைய யிரகுகொண்டு
வளமாகஅடிமுனையை துணித்துநீதான்
துட்டெடைரசம்விட்டு மொழுக்கால்மூடி
தூயனேகோழிமுட்டைக் கொண்டுவந்து
சட்டமாய்அவிழ்த்துமே சூடிருக்க
சடுகவென்றுசொருவிவிட்டால் குதிக்கும்பாரே

(வ-ம்) பேனாஇறகில்அடிமுனையைதுணித்துக்கொண்டு துட்டுயிடைபாதிரசம்விட்டு வாயைமொழுக்கால் மூடிவிட்டு முட்டையைஅவித்து சூட்டோடே முட்டையில ரசம்விட்டயிரகை சொரிகிவிட்டுபூமியில்வைத்தால் சூடிருக்கிறபரியந்தம்குதிக்கும்

## பூமிவெடித்து அக்கினிப்யுறப்படுஞ்ஜாலம்.

பூமிதனில்வெடித்துபொகை நெருப்புகாட்டும்
புதுமைதன்னைச்சொல்லுகிறேன் புத்தினாட்டு
ஆமப்பாகெந்தகமும் அரைத்ததூளும்
அப்பனேதண்ணிவிட்டு வுருண்டைசெய்து
தாமிஷங்கள்செய்யாமல் பூமிதன்னில்
தயவாகஓரடிபள்ளந் தோண்டி
நம்பியேபுதைத்துவிடு சாளியென்று
நாலுமணிநேரத்தில் வெடிக்கும்பாரே

(வ-ம்)கெந்தகமும்அரைத்ததூளுங்கலந்து ஜலம்விட்டுகொஞ்சம் எளவலாகவே வுருண்டைசெய்து பூமியில ஓரடிபள்ளந் தோண்டி புதைத்துவைத்தால் நாலுமணிநேரத்திற்குள் பஷமென்றதாகவெடித்து அக்கினிப்பிரவேசமாகுங் கண்டவர்கள்பிரமிப்பார்கள் ஆனால்வெய்யலில புதைக்கவேண்டும்.

## காயிதத்தின்மீது விசித்திரமெழுதி இரவில் இருட்டில் காட்டுஞ்ஜாலம்.

துல்லிதமாய்காயிதத்தைக் கொண்டுவந்து
 துலங்கவேதிமிரியுட பாஷாணத்தில்
நல்லதப்பாசித்திரங்கள் யெழுதிவிட்டு
 நயமாகயிரவுதனில் காட்டினாக்கால்
சொல்லியேசந்திரனைப் போலேதோணும்
 எல்லாருங்கண்டுமனம் ஆச்சரிப்பார்
வுல்லாசமாயதனைச் செய்துபாரு
 வுலகத்தில்வுனைமதித்து மயங்குவாரே.

(வ-ம்) திமிரிபாஷாணத்தை ஸ்டீலில் குத்திககொண்டு வெள்ளைகடிதாசியின்மேலெழுதி இரவில் இருட்டில் காட்டினால்பிரகாசமாக எழுத்துகள் தோணும் அந்தபாஷாணத்தை ஜலத்தில் போட்டு வைக்கவேண்டியது. சுஉ

## புட்டியில்தீபங்காட்டுஞ்ஜாலம்,

வெள்ளையென்றபுட்டிதனைக் கொண்டுவந்து
 வளமான்ஆளிவாயில்யெண்ணைதன்னை
கள்ளமில்லாக்காச் சிதனைவைத்துக்கொண்டு
 வுள்ளத்தில்பகவதினைபத் தியானஞ்செய்து
கொள்ளப்பாதிமிரியுட பாஷாணக்கை
 விள்ளுகிறேன்தொவளையிட பிறமாணந்தான்
வுள்ளுக்குபோட்டுயெண்ணை வூத்துமெள்ள
 உலகோர்கள் ஆச்சரிப்பார்கார்க்குமூடு

(வ-ம்) ஒருதல்லிதமானபுட்டியில்துவளையளவுதிமிர்பாஷாணம்முன்னதாய்ப்போடடு ஆளிவாலெண்ணையைக்காச்சி ஆறினபிறகு மெதுவாய்வூற்றி கார்க்குமூடினால் தீபம்போலபிரகாசிக்கும் கார்க்கைதிறந்தால பிரகாசமிராது. சுங

## புட்டியில்புட்பங் காட்டுஞ்ஜாலம்.

புட்டியென்றால்வெள்ளைபுட்டி கொண்டுவந்து
 புனல்அறைபுட்டிதனில் ஊத்த ஊத்து
நாட்டப்பாசுகர்லட்டு கொஞ்சம்போடு
 நலமானதுத்திநாகம் சுபற்றிற்கட்டி
வாட்டமாய்தொங்கவிட்டு கார்க்கைமூடு
 வையப்பாநாலுனாள் தங்கிப்பாரு

கேட்டவர்கள் ஆச்சரிக்கசாயும்பூவும்
கண்மணியேவேருடனே யெல்லபுந்தோணும்

(வ-ம்) ஒருதுலவிதமாகிய வெள்ளைபுட்டிகொண்டுவந்து அநைபுட்டி தண்ணீர்ஊற்றி ஈயபஸ்பக்கொஞ்சம்போட்டு துத்திராகத்தை கயற்றிலாவது கம்பிலாவதுகட்டி தண்ணியில்தாங்கும்படியாய் தொங்கவிட்டுகார்க்குமூடி நாலுநாள்வைத்திருந்து எடுத்துப்பார்த்தால் மகாவினோதமாயிருக்குஞ் சுகர்லட்டுக்குப்பேர் ஈயபஸ்பம்.

கொளத்தில்முழுகிகடிதாசியெழுதுஞ் ஜாலம்.

கொளத்திலேமுழுகியே கடிதந்தன்னை
குரிப்பாகயெழுதிவரும் வித்தைகேளு
கேளப்பாமுன்னுதாய் காகிதத்தில
குணமாகயெழுதுகிற முறையைச்சொல்வேன்
கொள்ளப்பா எலிமிச்சம்பழரசத்தில
கூட்டப்பாபடிகாரம் போட்டவைத்து
விள்ளவேயெழுதியே வுலரவைத்து
வேடிக்கையாய் நனைத்துபடித்துபாரு

(வ-ம்) எலுமிச்சம்பழஞ் சார்பிழிந்து படிகாரம்போட்டு கொழைத்து யெழுதினால்காயிதத்தைபார்த்தால் காய்ந்தபிறகு எழுத்துதெரியாமலிருக்கும் அனைவருக்குங்காட்டி சலமயானபகவதியென்று சலத்தில்தோய்த்து வாசித்துகாட்டினால்அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

தீபத்தைப்பார்த்தவுடன் கூத்தாடுஞ்ஜாலம்.

நாளென்றால்நாயிற்றுக் கிழமைதன்னில்
நம்பியேபல்லிதனைக் கண்டுநீதாண
கேளப்பாஅருணகயரும் ஆடையெல்லாம்
கிருணையுடன்களைந்துவிட்டு சொல்லக்கேளு
வளமானகத்திகொண்டு வாலைவெட்டு
வால்துடிககுமட்டும் மசிநசியைக்கூறு
தாளவேதிரிசுததி கொளித்திவைத்தால்
தம்பியடேபார்த்தவர்கள் ஆடுவாரே

(வ-ம்) நாயிற்றுக்கிழமையில் பல்லியைக்கண்டு ஆடைஅருணகயர் யெல்லாம்களைந்து நிர்வாணமாகநின்று கத்தியெடுத்து வாலைவெட்டினால் பல்லி வோடிவிடும்வால்பூமியில்விழுந்தவுடன் அதுதுடிக்குமட்டும் மசிநசியென்று சொல்லிக்கொண்டு வுன்மணம்போல குதித்தால் வால்துடிப்பு அடங்கினவுடன் வாலையெ

டுத்து துணிகந்தையில் உள்ளநவைத்து நலலெண்ணெயில்தோய்த்துதீபங்கொளுத்திவைத்தால் யார்வந்துதீபத்தைப்பார்த்தபோ திலும் முன்நீஆடினதுபோலவேஆடுவார்கள் வத்திமுன்னுதாய் வேரேபோட்டு அனைவருக்குங் காட்டியபிறகு இந்தவால்வத்தியை போடவேண்டியது அந்தவத்தியை மாத்திவிட்டால் குதிப்புநின்றுவிடுமநாயிற்று கிழமையில்தான் ஜாலயவுபயோகப்படும்கொளுத்தியபகசம் வாயலுக்குமேலவத்திகொஞ்சம்வைக்கவும் ஆனால்இரட்டைவால் பலலியாகயிருக்கவேணும்.

தண்ணியில்பாணவேடிக்கை காட்டுஞ்ஜாலம்.

குணமானகோப்பைதனில் தண்ணீர்விட்டு
  கொற்றவனேசபையோர்க்கு நன்றாய்க்காட்டு
பாணமதுகிளம்புகிற சூட்சமப்பா
  பாஸ்ப்றயிட்ஆப்லயின் கொண்டுவந்து
விரைவாகதண்ணீரில் கொஞ்சம்போடு
  நிற்காதுஆகாசம் சொன்னஜாலம்
இன்பமாம்யேகாம்பரம் சொனனஜாலம்
  யென்னபிழையிருந்தாலு மனைத்துங்காப்பீர்

(வ-ம்) கோப்பையில் ஜலம்வைத்து அனைவருக்குங்காட்டி பாபஸ்றயிட்டு ஆப்லயின்யென்று சொல்லும்படியான மருந்தை கொஞ்சம் தண்ணீரில்போட்டால் பொதையாணம்போல கிளம்பும் யிந்தமருந்துஷாப்பில்கிடைக்கும் இந்தஜாலம் சிலகனவான்கள் கைமுறையாகச்செய்த ஜாலங்களைக்கேட்டு செஞ்சி ஏகாம்பரமுதலியாரால்பாடலாக எழுதப்பட்டது. கூஎ

ஏழாம்பாகம் முற்றிற்று.

———[*]———

இனி எட்டாம்பாகம்.